**A**

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

**வகுப்பு 11**

பதிவு எண் | | | | | | |

## பொருளியல்

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**20×1=20**

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது.
அ) ஆடம் ஸ்மித் ஆ) இலயனல் ராபின்ஸ்
இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) சாமுவேல்சன்

2) பயன்பாடு என்பது
அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
இ) பண்டங்களின் மொத்த மதிப்பு
ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

3) பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?
அ) விலைக் கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு
இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

4) தருவிலை ரூ. 250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ. 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.
அ) 375 ஆ) 175 இ) 200 ஈ) 50

5) கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?
அ) வரி அதிகரிப்பதால் ஆ) அதிக மானியம் வழங்குவதால்
இ) வட்டிவீதம் அதிகரிப்பதால் ஈ) விலை அதிகரிப்பதால்

6) சமநோக்கு வளைகோடுகள்
அ) செங்குத்துக் கோடுகள் ஆ) படுக்கைக் கோடுகள்
இ) நேர்மறைச் சரிவுடையது ஈ) எதிர்மறை சரிவுடையது

7) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு

8) ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி
அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி
இ) சராசரி உற்பத்தி ஈ) ஆண்டு உற்பத்தி

9) பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்

10) வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் ............ செலவாகும்.
அ) சமூக ஆ) பொருளாதார இ) பண ஈ) மாறா

11) நீண்ட கால சராசரி செலவுக்கோடு ............ கோடு என அழைக்கப்படுகிறது.
அ) தேவை ஆ) திட்ட இ) உற்பத்தி ஈ) விற்பனை

12) ஒரு புத்தகம் ₹10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்
அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400

13) நிறுவனத்தின் சமநிலை என்பது
அ) MC = MR ஆ) MC > MR இ) MC < MR ஈ) MR = Price

14) எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?
அ) நிறைவு போட்டி ஆ) முற்றுரிமை
இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை

15) போலி வாரம் என்ற கருத்து யாருடன் தொடர்புடையது?
அ) ரிக்கார்டோ ஆ) கீன்ஸ் இ) வாக்கர் ஈ) மார்ஷல்

16) இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்.
அ) நிலம் ஆ) அமைப்பு இ) மூலதனம் ஈ) உழைப்பு

17) வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியாவின் இடம்
அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து

www.Padasalai.Net

18) காந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளைத் தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) V.K.R.V. இராவ் இ) J.C. குமரப்பா ஈ) A.K. சென்

19) இந்தியாவின் பசுமை புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்
அ) M.S. சுவாமிநாதன் ஆ) காந்தி இ) விஸ்வேஸ்வரையா ஈ) N.R. விஸ்வநாதன்

20) திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1950 ஆ) 1955 இ) 1960 ஈ) 1952

பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** **7×2=14**
**(வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

21) நுண் பொருளியல் என்றால் என்ன?
22) பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
23) விருப்பங்களை வகைப்படுத்துக.
24) கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
25) உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக.
26) மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?
27) கீழ்கண்ட நிறுவனத்தின் தேவைகோடு வரைக.
(அ) நிறைவு போட்டி (ஆ) முற்றுரிமை
28) பணக்கூலி மற்றும் உண்மைக் கூலியை வேறுபடுத்துக.
29) ''தொழில்நுட்பத் தெரிவு'' பற்றி சென் கூறுவது என்ன?
30) பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** **7×3=21**
**(வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

31) ''என்ன உற்பத்தி செய்ய வேண்டும்'' என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?
32) நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
33) நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தை தருக.
34) சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
35) தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
36) வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
37) நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
38) கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
39) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதற்கான காரணங்களை குறிப்பிடுக.
40) கிராம சர்வோதயம் - சிறுகுறிப்பு வரைக.

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **7×5=35**

41) அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
(அல்லது)
ஆ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.

42) அ) தேவை விதியை வரைபடத்துடன் விவரி. (அல்லது)
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.

43) அ) சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி. (அல்லது)
ஆ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.

44) அ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக. (அல்லது)
ஆ) நிறைவு போட்டியின் இயல்புகளை விளக்குக.

45) அ) முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவைத் தீர்மானிப்பதை விளக்குக.
(அல்லது)
ஆ) ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

46) அ) கீன்ஸின் வட்டிக் கோட்பாட்டை விவரி. (அல்லது)
ஆ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.

47) அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக. (அல்லது)
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

---------

www.Padasalai.Net

**11**

**காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023**
**வேலூர் மாவட்டம்**
**பொருளியல்**
**விடைக் குறிப்புகள்**

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **20 x 1 = 20**

1. (இ) ஆல்பிரட் மார்ஷல்
2. (ஆ) அமனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி ரிக்கா
3. (அ) விலைக் கோட்பாடு
4. (ஈ) 50
5. (ஆ) மானியம் வழங்குவதால்
6. (ஈ) எதிர்மறை சரிவுடையது
7. (ஈ) நிலம் மற்றும் உழைப்பு
8. (அ) இறுதி நிலை உற்பத்தி
9. (ஆ) நேர்மறை
10. (ஆ) பொருளாதார
11. (ஆ) திட்ட
12. (ஈ) 400
13. (அ) MC = MR
14. (ஆ) முற்றுரிமை
15. (ஈ) மார்ஷல்
16. (ஆ) அமைப்பு
17. (ஆ) ஏழு
18. (இ) J.C.குமாரப்பா
19. (அ) M.S.சுவாமிநாதன்
20. (அ) 1950

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்)** **7 x 2 = 14**

**21.** 1. நுண்ணியல் என்ற சொல் சிறிய என்று பொருள்படும்.
2. நுண்ணியல் பொருளியல், தனி பண்டத்தின் விலல, தனிப்பட்ட நிறுவனங்கள், தனி குடுமபங்களைப் பற்றி ஆராய்கிறது.

**22.** 1. வடிவப் பயன்பாடு 2. இடப் பயன்பாடு 3. காலப் பயன்பாடு


**23.** 1. இன்றியமையாத விருப்பங்கள் - உணவு, உடை, இருப்பிடம்.
2. வசதிக்கான விருப்பங்கள் - மின்விசிறி, தொலைகாட்சிப்பெட்டி.
3.ஆடம்பரத்திற்கான விருப்பங்கள - தங்கம், வைரம்.

**24.** ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ்நிலைப் பண்டங்கள் கிஃபன் பொருள்கள் எனப்படும். ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ்நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும், விலை குறைந்தால் தேவை அளவும் குறையும். **எ.கா.**கேழ்வரகு, சோளம்.


**25.** 1. நிலம் – வாரம் 2.உழைப்பு - கூலி
3.மூலதனம் - வட்டி 4. தொழில் அமைப்பு – இலாபம்.
நிலம் மற்றுமம உழைப்பு முதன்மை உற்பத்தி காரணிகள்.
மூலதனம் மற்றுமம தொழில் அமைப்பு இரண்டாம் நிலை உற்பத்தி காரணிகள்.

**26.** மீட்டு எடுக்க முடியாத கடந்த கால செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவு அல்லது மூழ்கும் செலவுகள் ஆகும். ஒரு முறை முதலீடு செய்யப்பட்டது மூழ்கியதாக கருதப்பட்டால் அவை மூழ்கும் செலவுகள் எனப்படும்.

**27.** அ.) நிறைவுப் போட்டி




ஆ.) முற்றுரிமை




**28.** 1. பணக் கூலி என்பது பெயரளவு கூலி அல்லது இயல்பு கூலி ஆகும்.
2. உண்லம கூலி என்பது பணத்தின் வாங்குமம சக்தியைப் பொறுத்து அமையும்.

www.Padasalai.Net

**29.** உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதரத்தில் மூலதன செறிவு நுட்ப முறையில், வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று சென் குறிப்பிடுகிறார்.

**30.**
1. தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.
2. வறுமை விகிதத்தை 15% ஆக குறைத்தல்.
3. வளர்ச்சி இலக்கு 8.0% ஆக நிர்ணயித்தது.

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்) 7 x 3 = 21**

**31.**
**1.** அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்வதா?
**2.** விவசாய பொருட்களா? அல்லது தொழிற்சாலை பொருட்களா?
**3.** கல்வி மற்றும் சுகாதாரத்திற்கா? அல்லது இராணுவ பணிகளுக்கா?
**4.** நுகர்வுப் பண்டமா? அல்லது முதலீட்டுப் பண்டமா?

**32.** நுண் பொருளியல் மற்றும் பேரியல் பொருளியல் என்ற சொற்களை முதன்முதலில் 1933-ஆம் ஆண்டு நார்வே நாட்டு பொருளியல் அறிஞரான பேராசிரியர் ராக்னர் ஃபிரிஷ் பயன்படுத்தினார்.

**1. நுண்ணியல் பொருளியல்**

தனி பண்டத்தின் விலல, தனிப்பட்ட நிறுவனங்கள், தனிக் குடுமபங்கள் பற்றி ஆராய்கிறது.

**2. பேரியல் பொருளியல்**

நாட்டின் ஒட்டுமொத்த செயல்பாடுகளைப் பற்றி ஆராய்கிறது.

**33.** "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட, வாங்குவதே மேல் என முடிவு செய்து கொடுக்க நினைக்கும் விலைக்கும் நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம்"

**ஆல்பிரட் மார்ஷல்**

**34.**
1. மேலிருந்து கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
2. தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3. ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாது.
4. X-அச்சையோ Y- அச்சையோ தொடாது.

**35.**
1. இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்தல்.
2. உற்பத்தி அலகின் அளவை தீர்மானித்தல்.
3. உற்பத்தி அலகின் இடத்தை தேர்ந்தெடுத்தல்.
4. உற்பத்தி காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பை கண்டறிதல்.
5. புத்தாக்கப்பணி.
6. இடர்பாடுகளை ஏற்றல், நிச்சயமின்மையை எதிர்கொள்ளல்.

**36.** வாய்ப்புச் செலவு என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவை குறிக்கும். ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தேடுக்கப்படுவதால் அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது.

**எ. கா.** ஒரு விவசாயி தன் நிலத்தில் கரும்பு அல்லது நெல் விளைவிக்க முடியும். அந்த விவசாயி நெல் விளைவித்தால் நெல்லின் வாய்ப்புச் செலவு என்பது விட்டு தந்த கரும்பின் உற்பத்தி செலவே ஆகும்.

**37.** **நிறுவனம்**

பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்து அதற்கு விலையை தீர்மானித்து விற்பனை செய்யும் ஒரு அமைப்பு நிறுவனம் என அழைக்கப்படுகிறது. **எ.கா.** சங்கர் சிமெண்ட்

**தொழில்**

ஒரே மாதிரியான பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்யக்கூடிய பல நிறுவனங்களின் தொகுப்பே தொழில் ஆகும். **எ.கா.** சிமெண்ட் தொழில்

**38.**
1. பெயரளவுக் கூலி அல்லது பணக் கூலி - பணமாக வழங்கப்படும்.
2. உண்மை கூலி - வாங்கும் சக்தியைப் பொறுத்தது.

www.Padasalai.Net

3. துண்டு கூலி - முடிக்கப்பட்ட வேலையின் அடிப்படையில் கூலி வழங்குவது.
4. நேரக் கூலி - நேரத்தின் அளவைப் பொறுத்து கூலி வழங்குவது.

**39.** 1. சுதந்திரத்திற்கு முன்னர் வணிக வங்கிகள் தனியார் வசம் இருந்தன.
2. இந்த வங்கிகள் அரசாங்கம் திட்டமிடுதலுக்கான சமூக இலக்குகளை அடைவதற்கு உதவி செய்யத் தவறின.
3. ஆகையால் அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜூலை 19, 1969 அன்று தேசியமயமாக்க முடிவு செய்தது. 1980-ஆம் ஆண்டில் அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

**40.** "உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான் " என்று என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும என்றார்.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7 x 5 = 35**

**41. (அ)**

**1.ஆடம் ஸ்மித் :** ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறார்.

**2.ஆலபிரேட் மபொர்ஷல :** மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான் செல்வத்தை அல்ல என்கிறார்.

**3.இலயனல் இராபின்சன் :** மனித விருப்பங்கள் எண்ணற்றவை. விருப்பங்களை நிறைவு செய்யும் வளைங்கள் பற்றாக்குறையானவை. பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழிவகுக்கிறது. எனவே இராபின்சனின் கூற்றுப்படி பொருளியல் தெரிவு செய்யும அறிவியல் ஆகும்.

**4.பால் ஏ. சசாமுவேல்சன் :** பொருளாதாரத்தின் உட்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. காலத்தை உள்ளடக்கியதால் இவரின் இலக்கணம் வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது. இவர் பொருளியலை சமூக அறிவியலாக கருதினார்

**(ஆ)**

**பொருளாதார முறைகள்**


1.முதலாளித்துவப் பொருளாதாரம். 2. சமதர்ம பொருளாதாரம் 3.கலப்பு பொருளாதாரம்

**பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகள்**

1.என்ன பண்டம் உற்பத்தி செய்வது?
2.எவ்வாறு பண்டங்கள் உற்பத்தி செய்வது?
3.யாருக்காக பண்டங்கள் உற்பத்தி செய்வது?

**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு**

ஒரு சமுதாயம் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டிருப்பதால் அதன் அனைத்து தெரிவுகளையும் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் வாயிலாக மேற்கொள்ள இயலும். உற்பத்தி வாய்ப்பு வளைகோடு என்பது பல இணைகளில் இரு பண்டங்களின் உற்பத்தியை மேற்கொள்வதாகும். எ.கா. உணவு உற்பத்தி மோட்டார் வாகன உற்பத்தி அதிக அளவு உணவு உற்பத்தியை பெற விரும்பினால் நாம் அதிக அளவு மோட்டார் உற்பத்தியை இழக்க வேண்டியுள்ளது. இது வாய்ப்புச் செலவிற்கு உட்பட்டதாகும். இதை வரைபடம் விளக்குகிறது.




**வரைபட விளக்கம்.**

1.உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மீது உள்ள புள்ளிகள் ($P_1$ $P_2$ $P_3$ $P_4$ ...)
இரு பண்டங்களின் உற்பத்தி வாய்பை குறிக்கிறது.

2. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு கீழ் அதாவது "$P_7$"பகுதி வளங்கள் முழுமையாக பயன்படுத்தாததைக் குறிக்கிறது.

3. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு மேல் அதாவது "P" பகுதி உற்பத்தி வாய்ப்பிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

www.Padasalai.Net

**42. (அ)**

இலக்கணம்
எடுகோள்கள்
வரைபடம்
வரைபட விளக்கம்

**(ஆ)**

இலக்கணம்
எடுகோள்கள்
விதியின் எடுத்துக்காட்டு விளக்கம்
அட்டவணை
வரைபடம்
வரைபட விளக்கம்
முக்கியத்துவம்
திறனாய்வு


**43. (அ)**

***சம அளவு உற்பத்தி கோடு***

*சம அளவு உற்பத்தி கோடு என்பது இரு உற்பத்தி காரணிகளை பல்வேறு கலவைகளில் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தி செய்வதை குறிக்கும்.*

***சம அளவு உற்பத்தி கோட்டின் இயல்புகள்***

1. மேலிருந்து கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
2. தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3. ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாது.
4. X-அச்சையோ Y- அச்சையோ தொடாது.





**(ஆ)**

***விகித அளவு விளைவு விதி***

*நீண்ட காலத்தில் அனைத்து உற்பத்தி காரணிகளும் மாறக்கூடியவை. அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறும் போது உற்பத்தியில் ஏற்படும் மாற்றமே விகித அளவு விளைவு விதி ஆகும்.*

***விகித அளவு விளைவு விதியின் மூன்று நிலைகள்.***

1. ***வளர்ந்து செல் விகித அளவு***
   *அலனத்து உளளீடுகளும 1% உயருமனபபொது பவளியீடுகள 1% க்கும னமல உயர்கிறது.*
2. ***மாறா விகித அளவு***
   *அனைத்து உற்பத்திக் காரணிகளும் 1% உயரும் போது வெளியீடும் அதே அளவு சம விகித அளவில் 1% உயரும.*
3. ***குறைந்து செல் விகித அளவு***
   *அனைத்து உற்பத்தி காரணிகளும் 1% உயரும் போது வெளியீடு 1% க்கும் குறைவாக உயர்கிறது.*




***வரைபட விளக்கம்***

1. a க்கும் b க்கும் இடையேயான பகுதி வளர்ந்து செல் விகித விளைவு விதியை குறிப்பிடுகிறது.
2. b க்கும் c க்கும் இடையேயான பகுதி மாறா விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.
3. c க்கும் d க்கும் இடையேயான பகுதி குறைந்து செல் விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.

www.Padasalai.Net

**44. (அ)**

***விலை மாறாத போது AR மற்றும் MR கோடுகள்***

*அட்டவணை*

*வரைபடம்*

**AR** மற்றும **MR** கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும். இது **X** அச்சுக்கு இணையாக இருக்கும். **P=AR=MR**.

***விலை மாறும் போது AR மற்றும் MR கோடுகள்***

*அட்டவணை*

*வரைபடம்*

விலை மாறும் போது விலை பேதம் காட்டப்படும். எனவே **AR** ஏகோட்டிற்கு கீழே **MR** இருக்கும.

**(ஆ)**

***நிறைவுப் போட்டியின் இயல்புகள்***

1. எண்ணற்ற வாங்குவோரும் விற்போரும்.
2. ஒரே தன்மையுடைய பண்டங்கள்
3. அங்காடி நிலைப் பற்றி முழுமையாக அறிந்திருத்தல்
4. உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை
5. உற்பத்திக் காரணிகள் இடம் பெயரும்
6. போக்குவரத்து செலவு இல்லை
7. அரசின் தலையீடு இல்லை.

**45. (அ)**

***முற்றுரிமை:***

1. ஒரே ஒருவிற்பனையாளர் மட்டும் இருப்பார்
2. விலையில் மாற்றம் இருக்கும்.
3. பதிலி பண்டங்கள் இருக்காது.
4. நிறுவனமும் தொழிலும் ஒன்றே ஆகும்.
5. புதிய நிறுவனங்கள் தொழிலுக்குள் நுழைய வாய்ப்பு இல்லை.


**வருவாய் கோடுகளும் செலவுக் கோடுகளும்**

1. முற்றுரிமையில் வருவாய் கோடுகள் மேல் இருந்து கீழ்நோக்கி சரிந்து செல்லும்.AR கோட்டிற்கு கீழ் MR கோடு அமைந்திருக்கும்.

2.செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.

**நிறுவனச்சமநிலை**

முற்றுரிமையில் நிறுவனச் சமநிலையானது MC = MR என்ற நிலையில் இருக்கும். MC கோடு MR கோட்டை கீழிருந்து மேல்நோக்கி வெட்டிச் செல்லும். அப்பொழுது சமநிலை விலை தீர்மானிக்கப்படுகிறது. இதை கீழ்க்காணும் வரைபடம் மூலம் விளக்கலாம்




**வரைபட விளக்கம்**

1. X அச்சில் உற்பத்தி அளவும் Y அச்சில் விலை, வருவாய், செலவும் குறிக்கப்பட்டுள்ளது.
2. E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.
3. OP என்பது சமநிலை விலை OM என்பது சமநிலை உற்பத்தி.
4. PQRS என்பது நிறுவனம் ஈட்டும்.

**(ஆ)**

***இலக்கணம்***

*"வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்."*


**டேவிட் ரிக்கார்டோ**

www.Padasalai.Net

**விளக்கம்**

ரிக்கார்டோ வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர் அதிக மக்கள் குடியேறும் போது நிலத்தின் தேவை அதிகரிக்கும். அதனால் இரண்டாம் தர நிலத்தை அவர்கள் பயிர் செய்வர். இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும். மக்கள்தொகை அதிகரிப்பதால், மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். அப்பொழுது இரண்டாம் தர நிலம் வாரத்தைப் பெறும். மேலும் முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும். மூன்றாம் தர நிலம் எவ்வித வாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம். இதை வரைபடம் மூலம் விளக்கலாம்.

**வரைபடவிளக்கம்**




1. முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும்.

II. இரண்டாம் தர நிலம் குறைந்த வாரத்தைப் பெறும்.

III. மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம். கோடிட்ட பகுதி வாரத்தை குறிக்கும்

**திறனாய்வு.**

1. தொடர்ந்து பயிர் செய்யப்பட்டால் நிலத்தின் செழுமை குறையும்
2. உழைப்பு, முதல் ஆகியவற்றிக்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.
3. ஒரு நிறுவனத்தைப் பொருத்தவரை வாரம் விலையோடு அடங்கும்.
4. நிறைவுப்போட்டி என்பது நடைமுறையில் இல்லை.

**46. (அ)**


வட்டி "ரொக்கமாக வைத்திருப்பதை தவிர்ப்பதற்காக கொடுக்கப்படும் வெகுமதியே வட்டி " என்று கீன்ஸ் கூறுகிறார்.


மூன்று நோக்கங்களுக்காக மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்திருக்க விரும்புவர். அவை

1. பரிமாற்ற நோக்கம் 2. முன்னெச்சரிக்கை நோக்கம். 3. ஊகவாணிக நோக்கம்.

**கீன்சின் வட்டிக் கோட்பாடு.**

வட்டி வீதத்தை தீர்மானிப்பதில் ஊகநோக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஊக நோக்கத்திற்காக வைத்திருக்கும் பணம் வட்டி வீதத்துடன் எதிர்மறை தொடர்பு கொண்டது.




**வரைபட விளக்கம்**

1. L - என்பது பணத்தேவை M - என்பது பண அளிப்பு r - என்பது வட்டி வீதத்தைக் குறிக்கும்.
2. 1வளைகோடும், M வளைகோடும் வெட்டும் புள்ளியில் வட்டிவீதம் r தீர்மானிக்கப்படுகிறது
3. பணத்தேவை $L_1$-க்கு, அதிகரிக்கும்போது அல்லது $M_1$-க்கு, குறையும்போது வட்டிவீதம் $r_1$-ஆக அதிகரிக்கும்.

**திறனாய்வு**

1. கீன்ஸ் நீர்மை தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்று மற்ற அறிஞர்கள் குறை கூறுகின்றனர்.
2. நீர்மை தன்மையற்ற சேமிப்புக்கு கொடுக்கப்படும் விலையே வட்டி வீதம் ஆகும் என்று ஜேக்கப் வைனர் கருதுகிறார்

www.Padasalai.Net

**(ஆ)**

1. இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்
2. வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது
3. வளர்ந்து வரும் சந்தை
4. வளர்ந்து வரும் பொருளாதாரம்
5. வேகமாக வளரும் பணிகள் துறை
6. மக்கள் தொகை பகுப்பு

**47. (அ)**

**1. கிராமக் குடியரசு:** காந்தியடிகள் கிராமங்களில் தான் இந்தியா வாழ்வதாகக் கருதினார். தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேறுவதை அவர் விரும்பினார்

**2. இயந்திரங்கள்:** காந்தியடிகள் இயந்திரங்களை மிகப்பெரிய பாவம்' என்று வர்ணித்தார்.

**3. தொழில்மயம்:** நாட்டின் திறனை முழுவதும் சுரண்டுவதை தொழில்மயம் சார்ந்துள்ளது எனக்கருதினார்.

**4.உற்பத்தி பரவலாக்கம்:** உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய காந்தி அது வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினார்.

**5. கிராம சர்வோதயா:** "உண்மையான இந்தியா வாழ்வது கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

**6. மக்கள் தொகை:** காந்தி செயற்கையான குடும்பக் கட்டுபாட்டு முறைகளை எதிர்த்தார். ஆனாலும், சுயகட்டுப்பாடே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சிறந்த வழி என்று கருதினார்.

**7. மதுவிலக்கு:** முழுமையான மதுவிலக்கை வலியுறுத்தியவர் காந்தியடிகள் இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதை விட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்'' என்றார்.

**(ஆ)**

***பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கு***

1. சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.
2. சிறுதொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி.
3. உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது.
4. மூலதன பயன்பாடு முழுமைபெற சிறுதொழில் வழிவகுக்கிறது.
5. சிறுதொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது.
6. சிறுதொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுகிறது.
7. சிறுதொழில் முனைவோர்களை உருவாக்குகின்றன.
8. சிறுதொழில் நிறுவனங்கள் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஆதரவு தருகின்றன.

www.Padasalai.Net

PREPARED BY

***சி.சுதாகர்*** அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஊசூர்

***கு.சுதாகர்*** அரசினர் மேல்நிலைப் பள்ளி, பனமடங்கி

***வேலூர் மாவட்டம்***